91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன.
★ பிரிவு I ★
07.30 - Zoology
08.30 - Botany
07.30 - Pure } Maths
08.30 - Applied } Maths
09.30 - Chemistry
10.30 - Physics
எமது வழமையான
ஆசிரியர் குழு
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன
★ பிரிவு II ★
08.30 - Zoology
09.30 - Botany
10.30 - Chemistry
11.30 - Physics
7.30 - Pure } Maths
8.30 - Applied } Maths
புதிய பகுதிகள்
ஆரம்பமாகியுள்ளன.
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

சுடர் 5: பிரமோதூத ஆடி 02 புதன்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ் பிறை 24 (18 - 07 - 1990)

UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 146

## யுத்த நிறுத்தம்; கண்காணிக்க சர்வதேசக் குழு

# வடபகுதி மதத் தலைவர்கள்

# ஜனாதிபதிக்கு அவசர மகஜர்!

## ஒற்றை ஆட்சியை சமஷ்டிக்கு மாற்றுவதே தீர்வுக்கு ஒரே வழி

யாழ்ப்பாணம் ஜூலை, 18

வடபகுதி மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து கூட்டாக ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாட்டின் ஒற்றை ஆட்சி முறையை சமஷ்டி முறைக்கு மாற்றுவதே ஒரே வழி என அவர்கள் அந்த மகஜரில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த யோசனை பற்றி பேசுவதற்கு வசதியாக உடன் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும்படியும், அந்த யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற அமைப்புகளை அனுமதிக்கும்படியும் சம்பந்தப்பட்ட இரு தரப்பாரையும் மதத் தலைவர்கள் கோரியிருக்கிறார்கள்.

யாழ். றோமன் கத்தோலிக்க ஆயர், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் குரு மகா சந்நிதானம், தென்னிந்திய திருச்சபையின் ஆயர், மெதடிஸ்த்த திருச்சபை பிரதிநிதி, அங்கிலிக்கன் திருச்சபை பிரதிநிதி ஆகியோர் இந்த மகஜரில் ஒப்பமிட்டிருக்கின்றனர்.

ஜூலை 15 திகதியிடப்பட்ட இந்த மகஜர் நேற்று சொழும்பில் தபால் நிலையம் ஒன்றில் வைத்துப் பதிவுத் தபாலாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி - காங்கேசனில் பொம்மர் குண்டு வீச்சு

காங்கேசன்துறை, ஜூலை 18

நேற்றுக் காலை ஏழு மணி அளவில் பலாலி. காங்கேசன்துறைப் பகுதியில் பொம்மர் குண்டுகளை வீசியது.

அதே சமயம் நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறை. பலாலி, முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் வீச்சுக்கள் இடம் பெற்றன. கட்டுவன், தையிட்டி. பலாலி, மயிலிட்டிப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

(இ-68)

## நேற்று மற்றொரு சடலமும் சூட்கேஸும் கரை ஒதுங்கின

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு தமிழகம் நோக்கிச் சென்ற படகுகள் சிலவற்றை இலங்கைக் கடற்படையினர் வழி மறித்துத் தாக்கி மூழ்கடித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்ந்து கரையை அடைந்து கொண்டிருக்கின்றன. படகுகளில் இவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட உடைமைகள் சிலவும் கரைசேருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை மற்றும் ஓர் இளம் பெண்ணின் சடலம் குருநகர் தொடர்மாடிக்குச் சமீபமாக கரை ஒதுங்கியது. அல்லைப்பிட்டிக் கடற்கரையில் சூட்கேஸ் ஒன்று கரை ஒதுங்கி இருக்கிறது.

நேற்றுக் காலை குருநகர் தொடர்மாடிக்குச் சமீபமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான 28 பேர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாடறுக்குமுனை என்ற இடத்தில் ஏற்கனவே கைது செய்து காவலில் வைத்திருந்த 28 தமிழர்களை ஸ்ரீலங்கா படையினர் கொலை செய்து எரித்துள்ளனர்.

சம்பவம் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-9)

## நேற்றும் பொம்மர் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். கோட்டை முகாமைச் சூழவுள்ள பகுதிகள் மீது நேற்று மாலையும் கடும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மூன்று பொம்மர்கள் நேற்று மாலை 6.15 மணி முதல் 6 40 மணி வரை இந்தத் தாக்குதல்களை நடத்தின.

ஒரு ஹெலிக்கொப்டர் வானத்தில் வட்டமிட்டு தாக்குதலை வழி நடத்த மூன்று அவ்ரோ விமானங்கள் மாறி மாறி குண்டுகளைப் பொழிந்தன.

பெரும் சத்தத்துடன் வெடித்த இந்தக் குண்டுகளினால் யாழ். நகரம் அதிர்ந்தது. ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றிய முழுத் தகவல்கள் நேற்றிரவு வரை தெரியவரவில்லை. (உ)

## முஸ்லிம் அகதிகளுக்கு 2 கப்பலில் பொருள்கள்

மன்னாரில் சுமார் 45 ஆயிரம் முஸ்லிம்அகதிகள்உணவு. மருந்தின்றி அவதிப்படுவதாக முஸ்லிம் விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் எம். எச். எம் அன்வர் கூறியதை அடுத்து இரண்டு கப்பல்களில் அங்கு உணவுப் பொருள்களை அனுப்பஜனாதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை —

வடக்கு. கிழக்கிற்கு 72 லொறிகளில் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (உ-9)

## இரவு நேரக் குண்டுவீச்சுக்கு ஐந்து பொதுமக்கள் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 18

மட்டக்களப்பு முனைக்காடு கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை (16ஆம் திகதி) இரவு நேரத்தில் குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

''அவ்ரோ'' விமானம் இரவு பத்து மணியளவில் நடத்திய குண்டு வீச்சினால் ஐந்து பொதுமக்கள் பலியானதாகவும், 20 வீடுகள் சேதமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே தினம் மட்டக்களப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டுக்கு மின் தடை:

## கிளிநொச்சியில் மின் கேபிள் பொம்மர் தாக்குதலால் சேதம்!

### திருத்த இராணுவத்தினர் அனுமதி தேவை

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்டத்தில் திங்கட்கிழமை மாலை தொடக்கம் ஏற்பட்ட மின்சாரத்தடை இரண்டொரு தினங்களில் சீர் செய்யப்படலாம் என நம்பப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் காவி வரும் கேபிள்கள் கிளிநொச்சியில் பொம்மர் தாக்குதலால் சேதம் அடைந்துள்ளன. அவற்றைத் திருத்துவதற்கு இராணுவத்தினர் அனுமதித்தால் மட்டுமே செல்லமுடியும் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மின்சார சபை அதிகாரிகள் நேற்று செஞ்சிலுவைச் சங்கத்தினருடனும், யாழ். அரசாங்க அதிபருடனும் தொடர்பு கொண்டனர். கேபிள் சேதமடைந்த விவரம் மின்சார சபையின் கொழும்புத் தலைமையகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை மாலை கிளிநொச்சியில் நடத்தப்பட்ட பொம்மர் குண்டு வீச்சினால் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்குச் சமீபமாக இருந்த 132 கே. வி மின்சார கேபிள்கள் சேதமடைந்தன. அதனாலேயே யாழ்ப்பாணக் குடா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

18- 7- 90
புதன்கிழமை ஆடி 02
சுபநேரம்:
4-30— 6-00
இராகுகாலம்
12-00—1-30

### முச்சந்தி முரளி



டில்லிக்குப் பொய் சொல்லப்போன கையோடு வாங்கிக் கட்டியிருக்கினம் எண்டு சொல்லுங்கோ............!

## ஜெனரேட்டர் மூலம் சுழற்சி முறையில் மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான லக்சபானா மின்சாரம் தடைப்பட்டதைத் தொடர்ந்து சுன்னாகம் மின் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர் மூலம் சுழற்சி முறையில் மின்சாரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று தொடக்கம் ஒன்று விட்ட ஒரு நாளைக்கு, ஒரு மணி நேரம் பாவனையாளர்கள் மின்சாரத்தைப் பெறுவதற்கு வகை செய்யப்படும் —

முதலில் பகல் நேரத்தில் மட்டுமே அந்தந்தப் பகுதி பாவனையாளருக்கு மின்சாரம் கிடைக்கும் —

ஜெனரேட்டர்கள் பழுதடையும் நிலையில் உள்ளதால் பாவனையாளர்களும், உள்ளூ

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கைது

யாழ்ப்பாணம், ஜூலை 18

செட்டிகுளத்தில் வைத்து ஸ்ரீலங்கா படையினர் மதுரை நாகேந்திரன் (வயது 22) என்பவரை கைது செய்துள்ளனர். (அ-9)

## தமிழர் படுகொலையை எதிர்த்து வெள்ளி முழு அளவில் ஹர்த்தால்

### தமிழகம் முற்றாக ஸ்தம்பிதம் அடையும்

சென்னை, ஜூலை 18

இலங்கைத் தமிழர் கொல்லப்படுவதைக் கண்டிக்கும் வகையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முழுக் கடையடைப்பு ஒன்றை நடத்தப் போவதாக தமிழக அரசு நேற்று அறிவித்தது.

அன்றைய தினம் பொது விடுமுறை நாளாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அன்று அரச அலுவலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாநில அரசு பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் மற்றும் அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், வங்கிகள், பல்கலைக்கழகங்கள், திரையரங்குகள், படப்பிடிப்புத் தளங்கள், கலையரங்குகள், கடைகள் மற்றும் உணவு விடுதிகள் முதலியன மூடியிருக்கும்.

ரயில், விமானப் போக்குவரத்து அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இயங்காது.

ஹர்த்தால் நடத்த தமிழக அரசு விடுத்த அழைப்பை ஜனதா தள் தமிழ் நாடு கிளை ஆதரவு தெரிவித்துள்ளது.

[அ-எ]

## உணவுப் பொருள் ஏற்றச் சென்ற வாகன அணி மீது தாக்குதல்!

### ஆனையிறவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

மதவாச்சியிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வருவதற்காக— செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கண்காணிப்புடன் — யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுப் புறப்பட்ட வாகன அணி மீது ஆனையிறவில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகன அணி மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் காயமுற்றதாகவும்-

அவர் பயணம் செய்த 'பிக்-அப்' வாகனம் சேதமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-

ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் லொறி ஒன்றின் சாரதி காயப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து வாகன அணி ஆனையிறவுக்கு அப்பால் ஓரிடத்தில் தங்கி நிற்பதாகவும்—

தொடர்ந்து மதவாச்சி நோக்கிச் செல்வதா என்பது குறித்து முடிவு செய்வதற்காக செஞ்சிலுவை அதிகாரிகள் தமது தலைமையகத்துடனும், கொழும்பு அரச அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெளித் தலையீட்டை இந்தியா அனுமதிக்காது!

புதுடில்லி, ஜூலை 18

இலங்கையில் இப்போது நடக்கும் யுத்தத்தில் எந்த ஒரு வெளிநாட்டு அரசும் குறுக்கிடுவதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து இந்தியா கவலைகொண்டிருக்கிறது.

இவ்வாறு இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. முச்குண்ட்துபே புதுடில்லிக்குத் திடீர் விஜயம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. வீரக்கோனிடம் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இந்தியாவுக்குத் தெரிவிப்பதற்காக அந்நாட்டு வெளியுறவுச் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்தினா முன்னர் மேற்கொண்ட விஜயம் திருப்திகரமாக அமையவில்லை.

அதனைத் தொடர்ந்து திரு.வீரக்கோன் நேற்றுப்புது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கொல்லப்படுவது குறித்து இந்திய எம்.பிக்கள் ஆட்சேபம்

### அனைத்துக் கட்சிக் குழுவிடம்

புதுடில்லி, ஜூலை 18

இலங்கையில் நடைபெறும் சண்டையில்அப்பாவித்தமிழர் கொல்லப்படுவது குறித்து தங்கள் கவலையை ஏழு இந்திய மத்திய அமைச்சர்களும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் புதுடில்லியில் தங்கியுள்ள இலங்கை நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவிடம் தெரிவித்தனர்.

இந்தியாவின் பாதுகாப்புக் குறித்து கொழும்பு அரசு மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும்—

தமிழ் அகதிகள் பெருமளவில் தமிழ்நாடு செல்வதை தடுக்க இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும்—

அவர்கள் இலங்கை நாடாளுமன்றக் குழுவைக் கேட்டுக் கொண்டனர். (அ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் நடந்த அட்டூழியங்கள்;
# ஒரு மாதம் சிக்கியிருந்து வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 18
மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் நடத்திய அட்டூழியங்கள் என்ன? அங்குள்ள தமிழர்கள் பலர் எப்படிக் கொலைசெய்யப்பட்டார்கள்?

மட்டக்களப்பிலிருந்து வெளியேறி கொழும்பு சென்று கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் திரும்பிய அரச போக்குவரத்து சபையின் சாரதி ஒருவர் அங்குள்ள நிலைமையை விவரிக்கிறார்.

ஜூன் 11 ஆம் திகதி காலை 6 மணிக்கு 95 பேருடன் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பை நோக்கி பஸ்ஸை செலுத்திச் சென்றேன்.

எம்முடன் வந்த மற்றொரு பஸ் மிகிந்தலையில் சிங்களப் பெண் ஒருவரை மோதியதை அடுத்து பஸ் அனுராதபுரம் பொலீஸ் நிலையம் சென்றது.

அங்கிருந்து பிரயாணிகள் பொலன்னறுவைக்கு பொலீஸாரால் அனுப்பப்பட்டனர். சாரதியும் நடத்துனரும் அந்த பஸ்ஸை அங்கே விட்டு யாழ்ப்பாணம் சென்றனர்.

நான் செலுத்திய பஸ் புனாவையை அடைந்தது. அப்போது மட்டக்களப்பு நிலைமையைப் பற்றி எமக்குத் தெரியாது. புனாவையில் இராணுவம் சோதித்து எம்மைச் செல்ல அனுமதித்தது. கிரானை மாலை நான்கு மணிக்கு அடைந்தோம்.

கிரான் இராணுவ முகாமை புலிகள் சுற்றிவளைத்துள்ளனர் என்றும் ஐந்து மணிக்குள் சரண் அடையும்படி கேட்டுள்ளனர் என்றும் அங்கு பொதுமக்கள் தெரிவித்தனர்.

நாம் 5.15க்கு மட்டக்களப்பை அடைந்தோம். பொதுமக்களை ஸ்ரேசன் அடியில் இறக்கினோம். எப்படி வந்தீர்கள் என்று அங்குள்ள மக்கள் ஆச்சரியப்பட்டனர். நான் பஸ்ஸை மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

மாலை 5-20 மட்டில் கிரான் இராணுவ முகாமில் சண்டை தொடங்கியது அதன் பின் வாகனம் எதுவும் நகருள் வரவில்லை.

கிரான் பகுதியில் பொம்மர் ஹெலி தாக்குதல்கள் இடம் பெற்றன.

அன்று காலையுடன் மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தாக்குதல் முடிவடைந்தது பொலீஸார் விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அன்று அரசுக்கு சொந்தமான சி.டபிள்யூ.ஈ நெற் சந்தைப்படுத்தும் நிலையம், ப.நோ.கூ. சங்கம், சிங்களவர்களின் கடைகள் பொது மக்களால் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டன. புத்த விகாரையும் எரிக்கப்பட்டது.

### கிரான் சண்டை

2, 3 நாட்களாக கிரானில் சண்டை நடந்து கொண்டிருந்தது கிரான் முகாம் கட்டடங்கள் இடிந்து விழுந்த போதும், பங்கர்களில் இருந்த இராணுவத்தினர் புலிகளுடன் மோதினார்கள் அப்போது விமானப்படையோ, ராணுவமோ நகருள் வரவில்லை.

ஜூன் 16 ஆம் திகதி கொழும்பில் இருந்து 2,000க்கு மேற்பட்ட இராணுவம் புனானை நோக்கி வந்தது. பின்பு வாகனேரியில் முதல் முதலாக புலிகளுடன் இராணுவத்தினர் மோதினார்கள். உயர் அதிகாரி உட்பட 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் தொடர்ந்து விமானம், ஹெலி அகோரத்தாக்கு தலை மேற்கொள்ள படை முன்னேறியது.

ஜூன் 17 ஆம் திகதி கிரானுக்கு படையினர் வந்தனர். அங்கு பங்கரில் இருந்த இராணுவத்தினரை மீட்டுக் கொண்டு முன்னேறிய போது வீதிகளில் கண்ட தமிழர்களை வெட்டித் தள்ளினார்கள்.

50க்கு மேற்பட்ட தமிழர் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி கொல்லப்பட்டனர். அவர்கள் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

ஜூன் 18 ஆம் திகதி படையினர் வாழைச்சேனைக்கு வந்தனர். கடதாசி ஆலையை சுற்றி வளைத்தனர். ஆலை ஊழியர்கள் உட்பட முன்னூற்றுக்கு மேற்பட்டவர்கள் அங்கு அகதியாகவிருந்தனர். "எல்லாம் வழமைக்கு திரும்பி விட்டது வீட்டுக்கு போங்கள்" என்று இராணுவம் கூறியது அதை நம்பி மக்கள் வெளியேறினார்கள் இராணுவம் இளம் வயதினரைப் பார்த்து சுட்டுத் தள்ளியது. அரச ஊழியர்கள் உட்பட 50க்கு மேற்பட்டவர்கள் அதில் பலியானார்கள்.

### நகருக்குள் பிரவேசம்

பின்பு இராணுவத்தினர் செங்கலடி, ஏறாவூர், ஊறணி ஊடாக நகருக்குள் பிரவேசித்தனர். எதிர்ப்பு இல்லாததால் அவர்களால் வர முடிந்தது.

ஜூன் 29 ஆம் திகதி ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்த இராணுவத்தினர் 12 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களை ஆலயங்களில் கூடுமாறு அறிவித்தனர். முகமூடி முன் சகலரும் நிறுத்தப்பட்டனர் "புலிகளுக்குச் சாப்பாடு கொடுத்தவர்களும், பணம் கொடுத்தவர்களும் தேவையில்லை. உண்மையில் ஆயுதம் தூக்கியவர்கள் மட்டும் முன்னுக்கு வாருங்கள்" என்று கடற்படை அதிகாரி கூறினார். பின்பு 22 பேர் மட்டும் தடுத்து வைக்கப்பட்டு, மற்றவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு கடைகள் மூடப்பட்டிருந்தன. வங்கிகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. மின்சாரம் இல்லை. போக்குவரத்து இல்லை மக்கள் வீதிகளில் நடமாடவில்லை. இராணுவம் நகரத்தில் ஒன்றரை மைல் சுற்றாடலில் தான் நிலை கொண்டிருந்தது. புலிகள் அவர்களைச் சூழ நிலைகொண்டிருந்தனர். எந்த நேரமும் என்ன நடக்குமோ என்ற நிலை இருந்து வந்தது.

மட்டக்களப்பில் இருந்து வெளியே போகவுள்ள புனானை, உவர்மலைப்பாதைகளூடாக மக்கள் வெளியே செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது.

கடந்த 2 ஆம் திகதி (ஜூலை 2) கொழும்பில் இருந்து மட்டக்களப்பு வந்த பஸ்ஸில் புறப்பட்டு கொழும்புக்கு சென்றேன். வாகனேரி மட்டுமே பஸ் வந்தது.

கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் தான் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு மக்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்கிறார். கொழும்பு செல்வோர் வாகனேரிவரை எந்த வித பாதுகாப்பும் இல்லாமல் தான் செல்ல வேண்டும்.

கொழும்பில் இருந்து படையினர் பாதுகாப்புடன் மட்டக்களப்பு நோக்கி வரும் பஸ்களும் வாகனேரியுடன் நின்று விடுகின்றன.

நான் ஒருவாறு கொழும்பு சென்று கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் திரும்பினேன்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

---

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கு உகந்த நல்ல இன சேவல்கள் விற்பனைக்கு உண்டு. விலைகுறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி/5277)

## கல்முனை அதிரடிப் படையிடம்

கொழும்பு, ஜூலை 18
கல்முனைப் பிரதேசத்தின் பாதுகாப்புப் பொறுப்பை விசேஷ அதிரடிப்படையினர் ஏற்றுள்ளனர்.

கடந்த 25 தினங்களுக்கு மேலாக கல்முனைப் பகுதியின் பாதுகாப்புப் பொறுப்பு இராணுவத்தினரிடம் இருந்து வந்தது. (இ எ)

## உதவி விரிவுரையாளர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜூலை 18
கிழக்குப் பல்கலைக் கழக உதவி விரிவுரையாளர் ஒருவர் கடந்தமாதம் 23 ஆம் திகதி இராணுவத்தினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

பெரிய போரதீவைச்சேர்ந்த சோமசுந்தரம் - மகேசன் (வயது 28) என்பவரே கொலை செய்யப்பட்டவர் ஆவார்

ஒரு விரிவுரையாளர் என்று தன்னை அடையாளப் படுத்திய பின்பும் ராணுவத்தினர் சுட்டனர் என்று கூறப்படுகிறது.

யாழ்-பல்கலைக் கழகத்தில் இருந்து கடந்த வருடம் தான் இவர் பட்டப்படிப்பைமுடித்து வெளியேறினார். (இ)

## போக்குவரத்து ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, ஜூலை 18
ஆனையிறவு ஊடாக பயணிகள் வாகனப்போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இதே நிலையே கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையிலும் காணப்படுகிறது.

இதனால் யாழ்குடா நாட்டுடனான பயணிகள் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிக்கலாம் என அஞ்சப்படுகின்றது. (இ-76)

## பிறந்தநாள் ஞாபகார்த்தம்



செல்வி
**ஆரணி ஜெயதாசன்**

தோற்றம்: 18-07-1977
மறைவு: 24 02-1987

நீயில்லாக்
கவலையினால்
நித்தமும் வாழும்
எம்மை
வேறெந்தக்
கவலைகளும்
வாராமல்
காத்திடுவாய்

ஆரணியை
நினைவு கூருவோர்.

'புது வீடு'
கருகம்பனை,
காங்கேசன்துறை.
[13750]

---

## அறிவித்தல்

வடமாகாண தெங்கு பனம்பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
திருநெல்வேலி – யாழ்ப்பாணம்

### வருடாந்த பொதுக் கூட்டம்
### 25-07-90

காலம்: 25 – 07 – 90 புதன் காலை 10-00 மணி
இடம்: சமாச புதியஅலுவலகம், திருநெல்வேலி.
தலைவர்: திரு. தி. அமிர்தநாதன் (சமாசத் தலைவர்)

மேற்படி கூட்ட அழைப்பிதழ் சகல சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அழைப்பிதழ் கிடைக்க தாமதம் ஏற்படினும், சங்கம் தமது சமாச பொதுச்சபைப் பிரதிநிதிகளைத் தவறாது சமூகம் கொடுக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்
நன்றி

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
வ. த. செல்லக்கண்டு
(செயலாளர்)
C/5278

---

## NOTICE

UNION ASSURANCE LIMITED
Sub Office at:
AITKEN SPENCE & CO. LTD.

Shifted to,
310, Navalar Road, Nallur,
Jaffna.
[13755]

---

## இடமாற்றம்

**THIRUPATHY TEX**

இல. 33, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில்
இயங்கி வந்த

★ திருப்பதி ரெக்ஸ் ★

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில் றேட் சென்ரர்,

முன்பாக அமைந்துள்ளது என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
[13...]

---

## 31வது நிறைவுநாள் அஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் கந்தையா நடராஜா
அவர்கள்

(இளைப்பாறிய நீர்ப்பாசன மேற்பார்வையாளர்,
கிளிநொச்சி)

மண்ணில் ஒரு மொட்டாக; 11 - 01 - 1928
விண்ணில் பெருஞ் சொத்தாக: 21 - 06 - 1990

21 – 06 – 1990 அன்றுநடைபெற்ற எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு 19 – 07 – 1990 வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளை.

அன்னை ...
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(13758)

---

## பிலிப்பீன்ஸில் பூகம்பம் 500க்கு அதிகமானோர் பலி

மணிலா, ஜூலை 18
பிலிப்பீன்ஸில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தில் இறந்தோரின் எண்ணிக்கை ஐநூறாக அதிகரித்தது.

கட்டட இடிபாடுகளுக்கு இடையில் இன்னும் நூற்றுக் கணக்கானோர் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மணிலாவில் இருந்து 90 மைல் தொலைவில் உள்ள மலை வாசஸ்தல நகர்ஒன்றே பூகம்பத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இடிந்து விழுந்த உல்லாச ஹோட்டல் ஒன்றின் இடிபாடுகளுக்குள் சுமார் 200 பேரளவில் சிக்கி இருக்கலாம் என்று கூறப்பட்டது. (இ-எ)

## குடாநாட்டில் 100 மினிபஸ்கள் தற்போது சேவையில்!

'யாழ். குடாநாட்டில் சகல பாதைகளிலும் மொத்தம் சுமார் 100 மினிபஸ்கள்சேவையில் ஈடுபடுகின்றன. டீசல் விலைக்கு ஏற்ப கட்டணம் அறவிடப்படுகிறது. இந்தச் சேவைதொடரப் பொதுமக்கள்பூரணஒத்துழைப்பு வழங்க வேண்டும்'.

- வடபிராந்திய மினிபஸ் போக்குவரத்துச் சங்கத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் முத்திரைச்சந்திக்கு அருகில மினி பஸ்களை நிறுத்தி பருத்தித்துறை வீதிப் போக்குவரத்தைத் தடை செய்யவேண்டாம்என்று மினிபஸ் உரிமையாளர்களை அவர் கேட்டுள்ளார் [உ-3]

## உக்ரைனும் தனி நாடாக பிரகடனம்

மாஸ்கோ ஜூலை 18
சோவியத்யூனியனில் உள்ள உக்ரைன் மாநிலக் குடியரசு சுதந்திர நாடாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது.

தனி இராணுவம், தனி நாணயம் ஆகியவற்றை ஏற்படுத்தப் போவதாகவும் உக்ரைன் மாநில அரசு அறிவித்தது. (உ-எ)

## அகதிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18
மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் சேகரிக்கப்பட்ட உடைகள், உலர்உணவு வகைகள் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் உள்ள அகதிகளுக்கு நேற்று வழங்கப்பட்டன. (இ-3)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
### திருமதி தங்கமலர் முத்துக்குமாரு

[பலாலி ஆசிரியர் கல்லூரி முன்னாள் இசை விரிவுரையாளர் பொன்முத்துக்குமாருவின் அன்பு மனைவி]

| தோற்றம் | கிரியை | மறைவு |
|---|---|---|
| 12-05-30 | 18-07-90 | 19-06-90 |

எங்கள் அருமை அம்மாவே? எங்களை எல்லாம் அன்புடன் பாலூட்டித் தாலாட்டி வளர்த்தீர்கள்.

உங்கள் பிரிவால் வாடும் பேரப்பிள்ளைகள் ஜனனி, யாழினி, உங்களை நினைத்து என்றும் அழுதுகொண்டே இருக்கிறார்கள்.

உங்கள் ஒளி வீசும் வதனம் கண்முன் நிழலாடுகின்றது. ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:
உங்கள் பிரிவால் வாடும் கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேத்திகள்.

அம்பனை,
தெல்லிப்பழை (13670)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### கணபதி கந்தசாமி அவர்கள்
[ஆயுள்வேத வைத்திய கலாநிதி]

ஜனனம்: 1928-10-04
மரணம்: 1990-06-19

எம்மில் அணையாத ஒளியாக மிளிர்ந்து நிறைந்த எம் இனிய தந்தையே! உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது.

19-07-1990 அன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்.

171/6, 1-ம் ஒழுங்கை,
அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [13673]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீப்பெட்டியா? லொறி வரட்டும்!

வடக்கு-கிழக்கில் யுத்தம் தொடங்கி ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. அதனால் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு மட்டுமல்லாமல் அனேகமாக எல்லாப் பொருள்களுக்குமே தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது.

1956 இல் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட அன்றே, ஒரு மொழி; இரு நாடுகள் -என்று கோடிட்டுக் காட்டினார், அப்போது தமிழர் நலனில் சிறிது அக்கறை கொண்டவராகக் காட்டிய டாக்டர் கொல்வின்.

இரு நாடுகள் உடனடியாக கிடைக்காவிடிலும் சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழருக்கு மாநில சுயாட்சி அரசு தேவை என்பதை அப்போதைய தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்தி வந்தார்கள் அவ்வித எண்ணக்கரு அனேகமாக, 1957 ஆம் ஆண்டிலேயே தமிழர்கள் மனதில் பதியத் தொடங்கி விட்டது.

சுயாட்சி அரசு ஒன்று அமைவதற்கு வடக்கு-கிழக்கில் பொருளாதார அடிப்படை அவசியம். பொருளாதார சுதந்திரம் இல்லாமல் அரசியல் சுதந்திரம் உரிய பயனைத் தராது. எனவே வடக்கு - கிழக்கின் வளங்களை இனங்கண்டு பொருளாதார சுபீட்சத்துக்கு அத்திவாரம் இட வேண்டும்.

இவ்வாறாக முப்பத்து மூன்று வருடங்களுக்கு முன்னரே தமிழ்ப் பகுதிகளின் பொருளாதார அத்திவாரம், கட்டமைப்பு, வளர்ச்சி குறித்துப் பேசப்பட்டு வந்தது. ஆனால் இதுவரை அத்திவாரத்துக்கு உரிய பத்திரிப்புக் கிடங்கு கூட சரிவர வெட்டத் தொடங்கப்படவில்லை!

மகாகவி பாரதியார் ஈழத்துத்தமிழர்களை நினைத்துத் தான் "வாய்ச் சொல்லில் வீரரடி" என்று கவிதை பாடி இருக்க வேண்டும்; தமிழர்கள் மூளைசாலிகள், திட்டமிட்டுச் செயற்படுபவர்கள் (சேமிப்பவர்கள்), முயற்சி உடையவர்கள், கடின உழைப்பாளிகள் என்று பெயர் பெற்றவர்கள். உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்று பொருளும், பெயரும் தேடும் நோக்குடன் தங்கள் திறமைகளை விற்றுப் பிழைப்பவர்கள்.

என்னுடைய மகன் டாக்டர், என்னுடைய தம்பி என்ஜினியர், அவன் மருமகன் எக்கவுண்டன்ட் என்று குறுகிய வட்டத்துக்குள்ளேயே நின்று கொண்டு -

அவர்கள் பெற்ற கல்வியும், பழகிய தொழிலும் தமது குடும்பத்தின் பண வளத்தைப் பெருக்கவேண்டும் என்று எண்ணுபவர்களே நம்மில் 99 சத வீதத்தினரும். வெட்கக் கேடு! எமது தாயகத்திற்காக, அதன் பொருளாதார வளர்ச்சிக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தவர் எத்தனை பேர்? நினைப்பவர் எத்தனை பேர்?

அப்படி ஒரு சிலராவது நினைத்திருந்தால் தீப்பெட்டிக்குக் கூட தென்னிலங்கையிலிருந்து வரும் லொறியை எதிர்பார்க்கும் நிலை இன்று இருக்குமா? இருக்கவேண்டுமா?

தீப்பெட்டி நாளாந்தம் அவசியம் தேவைப்படும் பாவனைப்பொருள் என்பதை விளக்க வேண்டியதில்லை. அதனை உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிற்சாலையையாவது இங்கு நிறுவ எவரும் நினைக்கவில்லையே!

தமிழ்நாட்டில் சிவகாசியில் குடிசைக் கைத்தொழிலாகச் செய்யப்படுகிறது தீப்பெட்டி உற்பத்தி. இரண்டு கிழமைகள் பயிற்சி எடுத்தால் குறைந்த மூலதனத்துடன் ஒரு தொழிலகத்தை இங்கு நிறுவியிருக்கலாம்.

இந்த லட்சணத்தில் தமிழ்ப் பகுதியின் பொருளாதாரத்தை, சிறிய அளவிலேனும், சாதகமான அளவிலேனும் வளர்க்க இனியாவது சிந்தை கொள்வோமா?

## லயன்ஸ் ஆலோசனை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான லயன்ஸ் கழக ஆலோசனைக் கூட்டம் எதிர் வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணி அளவில் மானிப்பாய் லோட்டன் வீதி, து. ரகுவின் இல்லத்தில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், சுன்னாகம், கோப்பாய், நல்லூர், மானிப்பாய் பரிஸ், சாவகச்சேரி ஆகிய லயன்ஸ் கழகங்களைச்சேர்ந்த தலைவர்கள், காரியதரிசிகள் ஆகியோர் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கூட்டத்துக்கு லயன்ஸ் பிரதேசத் தலைவர் தலைமை வகிப்பார்.

அன்றைய தினம் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக புதிய தலைவர் தனது பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

குடும்பநல சேவையாளர்

# பயிற்சிக்கு சென்ற பெண்களை திருப்பி அழைத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 18

குடும்பநல சேவையாளர் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள முல்லேரியா சென்ற 52 பெண்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் உதவியுடன் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை யாழ். சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கடந்த மாதம் 10ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதி வரை ஒரு வார காலத்துக்கு இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் முல்லேரியா வைத்தியசாலையில் நடைபெற்றன.

பயிற்சிநெறி முடிவடைந்ததும் யாழ்ப்பாணம் வரமுடியாத இவர்கள், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பாதுகாப்பாக உள்ளனர்.

இந்த 52 பெண்களும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைத் சேர்ந்தவர்கள். விரும்பிய இடங்களுக்கு இவர்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை கொழும்பில் இவர்களுக்கான சகல உதவிகளையும் பொதுஸ்தாபனங்கள் கவனித்துவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரம்ரூபா சம்பள முற்பணம் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி தெரிவித்தார். (இ-10)

## வெளியேற முடியாத நிலையில் 42 வெளிநாட்டவர்கள்

தமது சொந்த நாடு திரும்ப முடியாத நிலையில் யாழ்-மாவட்டத்தில் இன்னும் 42 வெளிநாட்டவர்கள் தங்கி உள்ளனர்.

இலங்கைத் தமிழரைத் திருமணம் செய்தவர்கள், சுற்றுலாவுக்கென வந்தவர்கள் ஆகியோர் இவர்களில் அடங்குவர் இதனைத்தவிர வெளிநாட்டு பிரஜா உரிமை பெற்ற 20 இலங்கைத்தமிழர்களும் இங்கு தங்கியுள்ளனர்.

இந்த 62 பேரில் பெரும்பாலானவர்கள் கனடா, ஜேர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியநாடுகளைச் சேர்ந்தவர்கள்,

இவர்களை யாழ்- மாவட்டத்திலிருந்து வெளியேற்றி பாதுகாப்பாக அனுப்பிவைக்குமாறு அந்தந்த நாட்டுத் தூதரகங்கள் இலங்கை அரசாங்கத்துக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் கோரிக்கை விடுத்துள்ளன. (இ-9)

## மன்னார் அஞ்சல் அலுவலக காசோலை

மன்னார் அஞ்சல் அலுவலக ஊழியருக்கான காசோலைகள் மட்டுமே தற்போது நுணாவில் கிழக்கில் வசிக்கும் கும் மன்னார் மாவட்ட அஞ்சல் திணைக்கள காசாளர் பொறுப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அஞ்சல் திணைக்கள ஜூன் மாதக் காசோலைகள் யாவும் மானிப்பாயில் உள்ள அஞ்சல் திணைக்கள யாழ். பிரதேச கணக்காளரின் தற்காலிக வாசஸ் தலத்தில் வைத்து எழுதப்பட்டன. (இ)

கொழும்பு செல்லும் பஸ்கள்:

## பயணிகள் பெயர்ப் பட்டியல் தயாரித்துத் தர வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கொழும்பு நோக்கிச் செல்லும் தனியார் பஸ்கள் அனைத்தும் ஏற்றிச்செல்லும் பயணிகளின் பெயர், விலாசம் ஆகியவை அடங்கியபட்டியலை சமர்ப்பித்து, கேரதீவு பாதையில் பயணம் செய்வதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நல்லூர் முத்திரைச்சந்தி பஸ் நிலையத்தில் வடபிராந்திய மினிபஸ் போக்குவரத்துச் சங்க மேற்பார்வையாளரிடம் பட்டியலை சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்.

வடபிராந்திய தனியார் போக்குவரத்துச் சங்கம் இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்திருக்கிறது.

இதேவேளை கொழும்பு செல்லும் மினிபஸ்கள் எந்தக் காரணம் கொண்டும் பயணிகளை இடைவழியில் இறக்கிவிட்டு வரக்கூடாது என்றும்-

தொடர்ந்து பயணத்தைமேற்கொள்ள முடியாதிருப்பின் பயணம் ஆரம்பமான இடத்திற்கு மீண்டும் பயணிகளைக் கூட்டிவந்து இறக்கிவிடவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகளை மீறும் பஸ்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

மன்னாரில்

## முஸ்லிம்களை இடம்பெயர கோருகிறார்கள் படையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

மன்னார் மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்களை வெளியேறுமாறு இராணுவத்தினர் கோரி உள்ளனராம்.

இதனால் பல முஸ்லிம்கள் புத்தளம் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர் என்றும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மன்னார் மாவட்டத்தின் தாராக்குளம், விடத்தல்தீவு, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்களும் அச்சம் காரணமாக யாழ்ப்பாணம் நோக்கி வரத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல முஸ்லிம் மக்களும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர் என்று முல்லைத்தீவு அரசாங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து

## கொழும்புக்குப் புறப்பட்ட மினிபஸ், பயணிகள் எங்கே?

கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து மினிபஸ் ஒன்றில் கொழும்பு புறப்பட்ட தமிழர்களுக்கு என்னநடந்தது? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

இது குறித்து எதுவித தகவலும் கிடைக்காமல் சம்பந்தப்பட்டவர்களது உறவினர்கள் கலக்கமுற்று உள்ளனர்.

இது பற்றி விவரம் வருமாறு:-

கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் இரு வெளிநாட்டு உல்லாச பயணிகளுடனும், சுமார் பத்துக்கு மேற்பட்ட பயணிகளுடனும் பஸ் ஒன்று யாழ்.நகரிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

பஸ்ஸை செலுத்திச் சென்றவர் கணேஸ் என்பவர். அவரது மனைவியும், கணேஷின் நண்பர்ஒருவரானபாபு என்பவரும் அவருடன் கூடச் சென்றனர். அவர்களின் மினி பஸ்ஸில் சென்ற பயணிகளில் அனேகமானவர்கள் வெளிநாடு செல்வதற்காக இங்கிருந்து புறப்பட்டவர்கள்.

ஒவ்வொருவரிடமும் பணமும் பெறுமதியான நகைகள் மற்றும் பொருள்களும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பிரஸ்தாப பஸ் ரம்பாவ தடைமுகாமில் மறிக்கப்பட்டு இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டதாகவும்—

பின்னர் உல்லாசப் பயணிகள் இருவரும் இறக்கப்பட்டு வேறொரு சிங்களவருக்குச் சொந்தமான பஸ்ஸில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர். என்றும்— சொல்லப்பட்டது.

ஆனால் மினிபஸ் இதுவரை கொழும்புக்கு சொல்லவில்லை. யாழ். நகருக்கும் திரும்பி வரவில்லை. பஸ்ஸுக்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை. (ஒ-9)

## பரந்தன் மக்கள் வங்கி வாரம் 2 நாள் வேலை

கிளிநொச்சி, ஜூலை 18

பரந்தன் மக்கள் வங்கி வாரம் இரண்டு தினங்கள் மட்டும் நடைபெறுகிறது.

போதிய ஊழியர்கள் சமுகமளிக்காததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது

பரந்தன் மக்கள் வங்கியில் கடமை ஆற்றும் ஊழியர்கள் பலர் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கி உள்ளனர். இவர்கள் தற்போதைய போர்க் கால நிலையால் யாழ்ப்பாணத்திலேயே கையெழுத்து இடுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை கிளிநொச்சி மக்கள் வங்கி, இலங்கை வங்கிக் கிளைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. ஆனால் கிளிநொச்சி கரடிப்போக்கில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளை வாரத்தில் ஐந்து நாட்களும் இயங்கி வருகிறது. (இ-76)

## வல்வைப்பகுதியை நோக்கி தாக்குதல் தொடர்கிறது

வல்வெட்டித்துறை, ஜூலை 18

கடற்பரப்பிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்கின்றன.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 4 மணி அளவில் நடாத்தப்பட்ட தாக்குதலில் கெருடாவில். கொம்மாந்துறை, கம்பர்மலை ஆகிய இடங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டன.

வியாழக்கிழமை காலை 9 மணிஅளவில் கடற்பரப்பிலிருந்து பீரங்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போது வல்வை வைத்தீஸ்வரர் தேவஸ்தானமும், வல்வை முத்துமாரி அம்மன் கோவிலும் சேதமடைந்தன.

அம்மன் கோவில் பிரதம குருக்களின் இல்லம், கம்பர் மலையில் பொன். கந்தையா ஞாபகார்த்த வாசிகசாலை என்பனவும் சேதமடைந்தன. ஆலடியில் உள்ள ஆலமரத்தின் கிளை முறிந்தது. ஆலடியிலும் வல்வைச்சந்தியிலும், பூச்சிக்குத்தான், கம்பர்மலை, கொம்மாந்துறை, ஊரிக்காடு, கெருடாவில் ஆகிய பகுதிகளிலும் பல வீடுகளும் கடைகளும் சேதமடைந்தன. இச் சம்பவத்தில் திருமதி. ஆடிய பாதம் என்னும் மூதாட்டி மரணமானார். பொதுமக்கள் பலரும் காயமடைந்தனர். (இ-160)

# வியாபார நிலையங்கள் சேதம் அடைந்ததால் வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கும்

(முன்தொடர்ச்சி)

முதலீட்டுத்தயக்கம், உள நிலையிலான மாற்றங்கள் என்பன பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

(i) வியாபார நிறுவனங்கள், தொழிற்கூடங்கள் என்பவற்றின் கட்டிடங்கள் பாதிக்கப்பட்டு அல்லது முற்றாக அழிந்திருப்பதால் உடனடியாக இவை இயங்க முடியாது, நிர்மாணவேலைகளினால் தாமதம் ஏற்படும். இதனால் இவற்றில் தொழில் புரிந்தோர் தொழிலற்றவர்களாவர். இதனால் தொழிலின்மை அதிகரித்து விடும். வேலையற்றோர் புதியளவில் அதிகரித்திருப்பர்

(ii) சீமெந்து, அஸ்பெஸ்டஸ் உற்பத்தித் தொழிற்

### தாக்கங்களும் தடுப்பு வழிகளும்

சாலைகள் பாதிக்கப்பட்டிருப்பதால், கட்டடப்பொருள்கள் கிடைப்பது கடினமாகி விடும். கிடைக்கும் பொருள்களினது விலைகளும் அதிகமாகிவிடும். இதனால் புனரமைப்பு தாமதமாகி விடும். காப்புறுதித் தொகைகள் பெறுவதில் சிக்கல் ஏற்படுமெனக் கருதினால் பலர் அவற்றை அதே நிலையில் விட்டுவிடலாம். இதனால் வேலையற்றோர் தொகை மேலும் அதிகரித்துவிடும்.

(iii) தொழில் நிறுவனங்களின் தளபாடங்கள், இருப்புக்கள் என்பன அழிந்து அல்லது சிதைந்து போயிருப்பதால், தொழிலைத் தொடர்ந்து நடாத்தமுடியாதிருக்கும். இவர்கள் முன்பு தாம் பெற்ற வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதிருப்பர். முன்பு வழங்கப்பட்டது போல், தவணையைப் புதுப்பிக்கவும், வட்டிவீதத்தில் கழிவும் பெறக்கூடியதான "மீள் அட்டவணையிடல்" முறையை வடகிழக்குப்பகுதி முயற்சியாளருக்கு வங்கித்துறை வழங்குமா என்பது சந்தே

பகுதி 3

கமே. இதனால் பல இடைத்தர நிலையிலான நிறுவனங்கள் வங்கித்துறையின் உதவியின்றிப் பாதிக்கப்பட்டு விடும்.

(iv) மினிபஸ், ஓட்டோரிக்ஷா, லொறிகள் போன்ற போக்குவரத்து வாகனங்களைக் கடன் முறையில் அல்லது வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கித் தொழில் செய்தவர்கள் யுத்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டிருந்ததால் தமது கடன் நிலுவைகளைச் செலுத்தத் தவறியிருப்பர். வங்கிகளோ, நிதிக்கம்பனிகளோ நாட்டின் எல்லாப் பகுதிகளுக்குமான பொது விதிகளின்படி இவர்களுக்குவிலக்கு அளிக்கமுடியாதென மறுக்குமானால் இவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுவிடும். இதனால் புதிய முதலீட்டு ஊக்கமும் வளரமாட்டாது இதனால் தனியார் போக்குவரத்துத்துறை அதிகம் பாதிக்கப்படலாம். போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்க வாய்ப்பு உருவாகும் இதனால் உற்பத்திச் செலவுகளும மக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரித்து விடலாம்.

(v) வியாபாரிகள் தமது நட்டங்களை ஈடு செய்ய மேலதிக இலாபம் ஈட்ட... வனத் தொழிலாளரில் ஆட்குறைப்புச் செய்யவும் விரும்புவர். யுத்த கால நட்டங்கள் பொருள்களின் விலை உயர்வின் மூலம் பொது மக்கள் மீது சுமத்தப்படும். இதனாலும் மக்களின் வாழ்க்கைத்தரம் மோசமாகப் பாதிக்கப்பட்டு விடும்.

### உற்பத்தியாளர் எண்ணிக்கை குறையலாம்

(vi) சிறிய கமக்காரர் தம் நட்டங்களினால் அச்சுறுத்தப்பட்ட நிலையில் முதலீடு செய்ய அதிகம் தயங்குவர். அவர்கள் தொழிலை/நட்ட ஈடு/செய்திருக்க மாட்டார்கள். பயிர்க் காப்புறுதியிலும் கவனம் செலுத்தாமலிருந்திருப்பர். பெரியளவு சேமிப்புக்களும் மீள முதலிடுவதற்கு அவர்களிடம் காணப்படுவதில்லை. இதனால் இவர்கள் உற்பத்தியிலிருந்து விலகி விடவும் விரும்புவர். இயன்றளவு தரகர்களாகவும், சிறுவியாபாரிகளாகவும் மாற முயல்வர். இதனால் வியாபாரிகள் எண்ணிக்கை அதிகரிக்கலாம். உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை குறைவடையலாம். இது நீண்ட கால பிரதேச உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தி விடும்.

மா. சின்னத்தம்பி
[B. A. B. Phil Hons]
துணை ஆசிரியர்,
பொருளியலாளன்

(vii) குடும்ப மட்ட பண்ணைத் தொழில்களில் ஏற்படும் நட்டங்களினால் அதிருப்தியடைந்த குடும்பங்கள் அவற்றில் முதலிடவும், நேரம் செலவிடவும் தயங்குவர். விற்பனைசெய்து விடுத்து [illegible] தொழில் முயற்சியை ஒடுக்கிக் கொள்வர். இதனால் பால், முட்டை என்பவற்றின் நிரம்பல் குறையும். இது குடும்ப மட்ட வருமானங்களையும் குறைக்கும். சேமிப்பும் குறைந்து விடும்.

(viii) அரச அலுவலர்கள், சிற்றூழியர்கள் இந்தக் கால கட்டத்தில் தொழில் ரீதியாக ஒரு கசப்புணர்வைப் பெற்றிருப்பர். குறிப்பாக சேவைத் தொழில்களில் ஈடுபட்டோர் தொழில் ரீதியில் விரக்தியுணர்வுடன் செயற்படுவர். ஆயிரம் ருபா பெறுமதியான காசோலைகளை வியாபாரிகளிடம் கொடுத்து நூறு ரூபாவைக் கூட கடனாக கேட்க வேண்டிய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திய தம் தொழில் மீது வெறுப்புணர்வையே பெற்றிருப்பர். இதனால் "ஏனோ தானோ" என்ற உணர்வுடன் செயற்படலாம்.

### இன்றைய பொருளாதாரம்

குடும்ப மட்டத்தில் அல்லது தனியாக வேறு பக்க வருமானம் தேடும் வழிகளில் நாட்டம் செலுத்துவர். சிறு கடைக்காரராக இருப்பது கூட பாதுகாப்பெனக் கருதுவர். இதனால் பாடசாலைகள், அலுவலகங்கள் என்பவற்றில் குறை வேலை, திறமையின்மை, இயன்றளவு லீவு எடுத்தல், லஞ்சம் பெறல் போன்றவை அதிகரிக்கச் சாத்தியம் உண்டு. இது நீண்ட காலத்திற்கு நீடிக்கும். இது அவர்கள் விரகதியுடன் தொடர்புடையதாகும்.

## முரசுமோட்டை ஆஸ்பத்திரியில் சமுகமளிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய சகல வைத்தியர்களையும், தாதிமார்களையும், ஊழியர்களையும் தற்காலிகமாகமுரசுமோட்டையில் இயங்கும் மிஷன் வைத்தியசாலைக்குச் செல்லுமாறு யாழ். சுகாதாரப் பணிப்பாளர் திரு. என். கனகசபை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியை முரசுமோட்டையில் தற்காலிகமாக இயங்கச்செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனையடுத்தே கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரியில் கடமையாற்றி ஏனைய வைத்தியசாலைகளில் தற்காலிகமாகக் கடமைபுரியும் அனைத்து ஊழியர்களையும் உடனடியாக முரசுமோட்டை மிஷன் வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-10)

## மண்ணையும் மக்களையும் காப்பாற்றவே துப்பாக்கிகள்

### அல்வாய் கூட்டத்தில் வாஞ்சிநாதன்

யாழ்ப்பாணம், ஜூலை 18

"நாங்கள் துப்பாக்கிகளின் மீது மோகம் கொண்டவர்கள் அல்லர் அல்லது, துப்பாக்கிகளை மட்டும் நம்பியிருப்பவர்களும் அல்லர். ஆனால் எமது மண்ணையும், மக்களையும் காப்பதற்கும், எமது பாரம்பரியத் 'தமிழீழ அரசை' மீண்டும் இம்மண்ணில் நிறுவுவதற்கும், துப்பாக்கிகள்தான் எமக்கு அவசியமானவை. எமது இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களான சீலன், ஆனந்தன் போன்றவர்கள் தம்மிடமுள்ள துப்பாக்கிகள் எதிரிகளிடம் போய்விடக்கூடாதே என்பதற்காகத் தமது உயிரையே அர்ப்பணித்தவர்கள்.

அல்வாய் வடக்கில் நடைபெற்ற போர்க்கால அவசரக் கூட்டத்தில், புலிகளின் முக்கியஸ்தர், கவிஞர் வாஞ்சிநாதன் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

"நாங்கள் பிறக்கிறோம், வாழ்கிறோம், இறக்கிறோம்.

இவையெல்லாம் தனி மனிதனின் சாதாரண நிகழ்வுகள். மனிதன் ஏன் பிறக்கிறான்? அவன் எப்படி வாழவேண்டும் அவன் எப்படி இறக்கவேண்டும்? என்ற கேள்விகளுக்கான விடைகளை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தான் பிறந்த தாய் நாட்டுக்காகப் போராடி வீரத்துடன் மரணிப்பதையே நாம் வாழ்வின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும் - அப்போதுதான் நமது வாழ்க்கையில் அர்த்தம் உண்டு"

இப்படி அவர் கூறினார். (இ)

## ஹெலி ரோந்து

கொடிகாமம், ஜூலை 18

மந்துவில், வேம்பிராய் பகுதிகளில் அடிக்கடி 'ஹெலி' வட்டமிட்டு வருகிறது. (இ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
பட அல்பங்கள், படச்சுருள்கள்
இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

# உதயன்

18 - 7 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
★ விநியோகம் ஒரு வாரம் [7 Days]
★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## மன்னாரில் 65,800 அகதிகள்

யாழ்ப்பாணம், ஜுலை 18

மன்னார் மாவட்டத்தில் 14ஆயிரத்து 950 குடும்பங்களைச் சேர்ந்த 65 ஆயிரத்து 800 பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் செயலக கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

இந்த அகதிகள் விடத்தல் தீவு, பேசாலை, எருக்கலம்பிட்டி, சனிகிராமம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும், மரங்களுக்குக் கீழும் அகதிகள் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கான உதவிகளை அரச அதிபரும், அரசு சார்பற்ற நிறுவனங்களும் வழங்கினாலும்கூட, உதவிகள் போதியளவு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## அனுதாபம்

கொழும்பு, ஜுலை 18

அகால மரணமடைந்த ஈ.பி.ஆர்.எல்.எப். எம்.பி வி. யோகசங்கரிக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் வின்சென்ட் பெரேரா பிரேரணையைக் கொண்டு வந்தார். (இ-எ)

## பரீட்சை ஒத்திவைப்பு இல்லை என்கிறார் அத்துலத்முதலி

கொழும்பு, ஜுலை 18

ஜீ. சி. ஈ உயர்தரப்பத்திரப் பரீட்சையை ஒத்திவைக்கப்போவது இல்லை என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித்அத்துலத்முதலி அறிவித்து இருக்கிறார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நான் கல்வி அமைச்சராக இருக்கும் வரை எந்த ஒரு பரீட்சையையும் பின்போட அனுமதிக்க மாட்டேன்.

வடக்கு - கிழக்கில் யுத்தம் நடப்பதால் ஜீ. சி. ஈ உயர்தரப்பத்திரப் பரீட்சை ஒத்திவைக்கப்படலாம் என்றுசிலர் நினைக்கலாம்.

ஆனால் அதற்கு நான் இடமளிக்க மாட்டேன்.

பரீட்சையை ஒத்திவைத்தால் பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக படிப்பு எல்லாமே சீர்குலைந்து விடும்.

எனவே தான் ஜீ சி. ஈ உயர்தரப் பரீட்சையைஒத்திவைக்க முடியாதநிலை-

இப்படி அமைச்சர் அத்துலத்முதலி கூறினார்.

இதே வேளை ஜீ. சி ஈ. உயர்தரப்பத்திரப் பரீட்சையை ஒத்திவைக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி எ.ம்.பி மாவை சேனாதிராசா அமைச்சர் அத்துலத்முதலிக்கு அனுப்பிய தந்தி ஒன்றின் மூலம் கோரியுள்ளார். [இ-எ]

## தமிழீழ மீட்பு நிதிக் கூட்டம்

கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் தமிழீழமீட்பு நிதி விளக்கக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கோப்பாய் வடக்கு பகுதியில் இன்றும், கோப்பாய் தெற்குப் பகுதியில் நாளையும், நாளை மறுதினமும் உரும்பராய் வடக்கு, மேற்குப் பகுதிகளில் 21ஆம்,22 ஆம் திகதிகளிலும், உரும்பராய் தெற்கு, கிழக்கு, பகுதிகளில் 23 ஆம், 24 ஆம் திகதிகளிலும், ஊரெழு பகுதியில் 25ஆம் திகதியும் கூட்டம் நடைபெறும். (இ-3)

## இலங்கை நாடாளுமன்ற குழு கருணாநிதியை சந்திக்குமா?

கொழும்பு, ஜுலை 18

புதுடில்லி சென்றுள்ள இலங்கை நாடாளுமன்றக் குழுவினர் தமிழக முதலமைச்சர் கருணாநிதியையும் சந்தித்துப் பேச முயற்சிப்பர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

சபாநாயகர் முஹம்மது தலைமையில் இக்குழு கடந்த ஞாயிறு புதுடில்லி சென்றது.

இக்குழுவில் ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த எம்பிக்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். (இ-எ)

## புளொட் தூதுக்குழு சிறிமாவுடன் பேச்சு!

கொழும்பு, ஜுலை 18

புளொட் இயக்கத்தூதுக் குழு ஒன்று எதிர்க்கட்சித் தலைவிசிறிமாவோ பண்டாரநாயக்காவை கடந்த திங்கட்கிழமை காலை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியது.

வடக்கு-கிழக்கு நிலைமை பற்றி அப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

புளொட் தூதுக் குழுவுக்கு திரு. த. சித்தார்த்தன் தலைமை வகித்தார். (இ - எ)

## மத்தியஸ்தம் வகிக்க தொண்டமான் தயாராம்

கொழும்பு, ஜுலை 18

விடுதலைப்புலிகள் இயக்கம் விரும்பினால் மத்தியஸ்தப் பணியை மேற்கொள்ள அமைச்சர் தொண்டமான் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

இப்படி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் இயக்கம் எதிர்பார்ப்பது என்ன? சமஷ்டியா, மாநில சுயாட்சியா? கூடுதலான அதிகாரங்களா, இவற்றைத் தெரியப்படுத்தினால் இது குறித்துத் தமது பங்களிப்பைச் செய்ய முடியும் என்று அமைச்சர் தொண்டமான் எண்ணுகின்றார் என்று இக்கொழும்பு பத்திரிகை மேலும் தெரிவித்தது. (இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-07-1990 இல் அச்சிடு வெளியிடப்பட்டது.

## திருமலையை முற்றுகையிட்டு படையினர் தீவிர தேடுதல்

### பலர் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்

கொழும்பு, ஜுலை 18

கடந்த வாரம் ஒரு நாள் ஆயிரத்துக்குஅதிகமான ஆயுத படையினர் திருகோணமலை நகரைச் சுற்றி வளைத்து நடத்திய தேடுதலின் போது எண்ணிக்கை குறிப்பிடாத அளவு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதிகாலை நகரைச் சுற்றி இலங்கைக் கடற்படை வீரர்கள் முற்றுகையிட்டனர்.

பின்னர் ஒலிபெருக்கிகள் மூலம் சகல ஆண்களையும் முற்றவெளியில் உள்ள மக்ஹெய்சர் விளையாட்டரங்குக்கு வரும்படி படையினர் உத்தரவிட்டனர்.

தீவிரவாதிகள் என்று சந்தேகப்படுபவர்களைக் கண்டு பிடிப்பதற்காக அனைவரும் அணிவகுத்து செல்லும்படி உத்தரவிடப்பட்டனர்.

அப்போது பலர் சந்தேகத்தின் மீது விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்,

அப்படி கூட்டிச்செல்லப்பட்டோர்களின் எண்ணிக்கை சொல்லப்படவில்லை.

விளையாட்டரங்கில் அந்த அணிவகுப்பு நடந்து கொண்டிருந்த சமயம் பொலீஸார் பதுக்கி வைக்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர். (இ-எ)

## தினமும் தபால் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 18

யாழ் - நகரத்தில் உள்ள தபால் பெட்டிகளில் இருந்து தினசரி காலை பத்து மணிக்கு தபால் சேகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

யாழ். பிரதம தபால் அதிபர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் தமது வெளிநாட்டு, உள்நாட்டுக் கடிதங்களை மக்கள் புழங்கும் பகுதிகளில் உள்ள தபால பெட்டிகளில் போடலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தேங்கிக் கிடந்த குடாநாட்டுக்கான தபால் பொதிகள் நேற்று சைக்கிள் மூலம் ஒவ்வொரு தபால் கந்தோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. (இ-10)

## பிரார்த்தனை நடத்த வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜுலை 18

இன்றைய காலகட்டத்தில் மன அமைதியும், சுபீட்ச வாழ்வும் வேண்டி ஆலயங்களிலும், சமய நிறுவனங்களிலும் கூட்டுப் பிரார்த்தனை, விசேட வழிபாடுகள் நடத்துமாறு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தந்தக் கிராமங்களில் உள்ள ஆலயங்களிலும், சமய நிறுவனங்களிலும் திருமுறைகள் மற்றும் பாராயணங்களை ஓதுமாறு சுவாமிகள் கேட்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளை நடத்த யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், சைவ மகளிர் மன்றமும் தமது ஒத்துழைப்பை நல்குவர். (அ)

## இராணுவ அதிகாரி பலி

கொழும்பு, ஜுலை 18

அம்பாறை மாவட்டத்தில் பக்கியெல்ல என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளுடனான மோதலில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது. (அ-எ)

## அஞ்சலிக் கூட்டம்

அண்மையில் வல்வெட்டித்துறையில் கடற்படை மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த மூன்று கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் விடுதலைப்புலிகள் பிரமுகர்களான யோகரட்ணம் யோகி, தேவர், ரங்கன் ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவர். [illegible]

## ஈழத்தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கு தமிழ்நாடு 10 கோடி ரூபா திட்டம்

சென்னை, ஜுலை 18

தமிழ்நாடு வரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுக்கென மாநில அரசு பத்துக் கோடி ரூபா திட்டம் ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மறுவாழ்வுத்துறை இயக்குநர் திருமதி சி. எம். கரியாலி இதனை மண்டபம் முகாமில வைத்து செய்தியாளரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

அடுத்த ஆறு மாதங்களில் தமிழகத்தில் 50 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் வந்து சேர்வர் என்ற உத்தேசப்படி இத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் திருமதி கரியாலி சொன்னார்.

### நகைக்கடன்

இலங்கையில் இருந்து அகதிகள் கொண்டுவரும் நகைகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வதற்காக நகைக்கடன் வழங்குவதற்கு என்று இடம் பெயர்ந்தோர் வங்கிக்கிளை ஒன்று இராமேஸ்வரத்தில் திறக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை-

அகதிகள் கொண்டுவரும் இலங்கை நாணயத்திற்கு நிகராக இந்திய ரூபா கிடைக்க வழிசெய்யும் வகையில் வங்கிக் கிளை ஒன்றைத் திறப்பது குறித்து இந்திய ஸ்டேட் வங்கியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக மறுவாழ்வுத்துறை விசேட அதிகாரி திரு. சி. எம். இராம்தாஸ் தெரிவித்தார்.

மத்திய அரசின் மறுவாழ்வுத் துறைச் செயலாளர் திரு. தாஸ் மண்டபம் முகாமைப் பார்வையிட்டார். [அ-எ]

## உணவு, மருந்து வகைகளுடன் 2வது தடவையாக லொறிகள்

யாழ்ப்பாணம், ஜுலை 18

கொழும்பிலிருந்து28லொறிகளில் வடபகுதிக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகள் நேற்று மதவாச்சிக்கு அனுப்பப்பட்டன, அவை யாழ்ப்பாண லொறிகளில் ஏற்றப்பட்டு இன்று இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட இரண்டாவது வாகன அணியில்4லொறி அரிசியும், 7 லொறி மாவும், 6லொறி சீனியும், ஒருலொறி பால்மாவும், ஒருலொறி மருந்துவகைகளும் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தின பிரிவினால் அனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு 5 லொறிகளில உணவு மற்றும் மருந்துப் பொருள்களும் இரண்டு லொறிகளில் சர்வோதயத்துக்கான உணவுப் பொருள்களும், ஒரு லொறியில் கியுடெக் அமைப்புக்கான உணவுப் பொருள்களும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவுக்கான பொருள்கள் அடங்கிய ஒரு லொறியும் வருகின்றன.

செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வரும் ஐந்து லொறிகளில் ஒரு லொறியில் செட்டிகுளம் பகுதி மக்களுக்கான உலர் உணவுகள்கொண்ட400பொதிகள் வருகின்றன.

இங்கிருந்து சென்ற 25 லொறிகளுடன் செஞ்சிலுவைச்சங்கத்தின் இருலொறிகளும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் ஒரு லொறியுமாக 28 லொறிகள் இன்று யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜெனரேட்டர்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராட்சி சபைகளும் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டியது அவசியம் — என்றும் மின்சார சபையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இப்போது கையிருப்பில் உள்ள ''ஹெவி டீசல்'' எரிபொருள் ஒரு மாதத்துக்குச் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்க மட்டுமே போதுமானது என்றும் அவர் மேலும் சொன்னார். (அ-10)

## கிளிநொச்சியில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கான மின்சாரம் தடைப்பட்டது.

திருத்தவேலைகளை இரண்டொரு நாளில் செய்துவிட முடியும் என்றும், ஆனால் கேபிள் சேதமடைந்த பகுதிக்கு கிளிநொச்சி இராணுவத்தினரின் முன் அனுமதியுடனேயே செல்ல முடியும் என்றும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. [illegible]

## வடபகுதி மதத் தலைவர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அனுப்பப்பட்டதாகவும்-

அது இன்று ஜனாதிபதியின் பரிசீலனைக்குச் செல்லும் என்றும் தெரியவந்தது.

மகஜரின் சாராம்சம் வருமாறு :

வடக்கு, கிழக்கில் பெரும் அவதியும், பயமும் நிலவும் இந்தக் காலகட்டத்தில் — பயங்கரப் போரின் மத்தியில் வாழவேண்டிய கஷ்டமான இந்தச் சூழ்நிலையில்—மனித உரிமைகளும், அடிப்படை உரிமைகளும் இரு பகுதியினராலும் சட்டபூர்வமாக கவனத்துக்கு எடுக்கப்படாத இந்த நிலையில் — தமிழ் மக்களின் மதத் தலைவர்களாகிய நாம், எமது மககளின் அபிலாஷைகளை வெளியிட விரும்புகின்றோம்.

தமிழ், சிங்கள மக்களினது தேசிய எழுச்சியானது நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியங்களையும் வேர்களையும் கொண்டுள்ளது.

ஆகவே ஒரு நாடு என்ற ஐக்கிய நிலை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்றால் வெவ்வேறு தேசியக் குழுக்களைச் சேர்ந்த மக்களின் உரிமைகள் போதிய அளவில் அங்கீகரிக்கப்படவும் உத்தரவாதமளிக்கப்படவும் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட இந்த இலக்கை அடைவதற்கு, இலங்கை நாட்டை சமஷ்டி அமைப்பு அரசியல் முறைக்கு மாற்றுவதுதான் திருப்திகரமான ஒரே வழியாகும்.

சமஷ்டி முறையினால் மட்டுமே மத்திய அரசாங்கத்தின் அரசியல் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் சமஷ்டி அமைப்புகளுக்கு உண்மையாகப் பகிர்ந்தளிக்க முடியும்.

நாம் முன்வைத்துள்ள இந்தத் திட்டம் வடக்கு கிழக்கில் உள்ள சகல அரசியல் சக்திகளும், தமிழ் மக்களும் வரவேற்கக்கூடியதாகஉள்ளது.

தற்போதுள்ளமாகாணசபை முறை திருப்திகரமான ஒன்றல்ல.

வேறுபட்ட இனக் குழுக்களின் உரிமைகளைப் போதிய அளவில் அங்கீகரிக்கவும், உத்தரவாதம் அளிக்கவும் -

மத்திய அரசாங்கத்தின்அதிகாரங்களையும், பொறுப்புகளையும் உண்மையான முறையில் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கவும் -

மாகாணசபை முறையானது தவறிவிட்டது.

ஆகவே -

தற்போதுள்ள ஒற்றையாட்சி முறையிலான இலங்கையின் ஆட்சி அமைப்பை, அரசியல் சட்டத்தைத் தகுந்த விதத்தில்திருத்துவதன்மூலம், சமஷ்டி அமைப்புக்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கோருகின்றோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண - மேலே முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனை குறித்து பேச்சு நடத்துவதற்கு வழியாக - சண்டையை நிறுத்தும்படி இரு தரப்பினரையும் கோருகின்றோம்.

மேலும், சண்டை நிறுத்தத்தைக் கண்காணிக்க சர்வதேச அங்கீகாரம் பெற்ற அமைப்புகளை அனுமதிக்கும்படியும் கோருகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இரவு நேரக் குண்டு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படைமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்டிலறி ஷெல்லும் அதேகிராமத்தில்வீழ்ந்து வெடித்தது.

இதில் கு. விநாயகமூர்த்தி, சி. கணபதிப்பிள்ளை, வீ. ராஜா, வீ. கோவிந்தன் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

### கொக்கட்டிச் சோலையிலும் 5 பேர் பலி

இதேவேளை 16 ஆம் திகதியன்று கொக்கட்டிச்சோலை பகுதியில் ''அவ்ரோ'' விமானங்கள் காலை 8.30 மணிக்கு குண்டுவீச்சு மேற்கொண்டதில் 5 தமிழர்கள் கொல்லப்பட்டனர்; 10 பேர் காயமடைந்தனர். 5 வீடுகள் சேதமாகின.

குண்டு வீச்சில் காயமடைந்தோர் பெயர் விவரம் வருமாறு:-

க. சபேந்திரராஜா [15 வயது] மகிழடித்தீவு, க. பிள்ளையம்மாள் [35 வயது] மகிழடித்தீவு, க. புவனசிங்கம் [35 வயது] முனைக்காடு, வெ. செல்வம் [46 வயது] கிரான்குளம், சி. கணேசபதி [35 வயது] கொக்கட்டிச்சோலை, வீ. பரஞ்சோதி [30 வயது] கொக்கட்டிச் சோலை, அ. இன்பநாயகி [19 வயது]கொக்கட்டிச்சோலை, வ. தர்மலிங்கம் [35 வயது] முனைக்காடு, ச. அருளானந்தம் [39 வயது] தாளங்குடா, க. கஷீர் [29 வயது] கொக்கட்டிச்சோலை.

## முல்லைத்தீவுக்கு

யாழ்ப்பாணம், ஜுலை 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி நேற்று அங்கு விஜயம் செய்தார். (இ-3)

## நேற்று---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கரை ஒதுங்கிய சடலம் வலையில் சிக்கிய நிலையில் காணப்பட்டது. பச்சை நிற மேல் சட்டை மட்டும் உடலில் காணப்பட்டது. அடையாளம் காணமுடியாத நிலையில் இருந்த இந்தச் சடலம் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டது.

அல்லைப்பிட்டி கடற்கரையில் மிதந்து வந்த சூட்கேஸில் ஒரு சங்கிலி, ஒருசோடி காப்பு மற்றும் உடு புடைவைகள் காணப்பட்டன.

இந்தப் பெட்டியை அல்லைப்பிட்டி விழிப்புக் குழுவினர் பொறுப்பெடுத்து தீவுப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பாரம்கொடுத்தனர். (இ-167-51)

## உணவுப்...

(1 ஆம் பக்கம் பார்க்க)

ருப்பதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை—

நேற்றுக் காலையில் ஆனையிறவு முகாம் பகுதியில் ஹெலியிலிருந்து போடப்பட்ட உணவுப் பொதிகளை எடுக்க முகாமிலிருந்த படையினர் முயற்சித்ததாகவும்-

அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அவர்கள் முகாமுக்குள் திரும்பிச் சென்றதாகவும்-

பின்னர் செஞ்சிலுவைச் சங்க வாகன அணி ஆனையிறவு முகாம் பகுதிக்குச் சென்ற போது முகாமை விட்டு வெளியேறி, அந்த வாகனங்களுக்கிடையே மறைந்து சென்று உணவுப் பொதிகளை எடுக்க படையினர் முயன்றதாகவும்—

வாகன அணி முகாமை விட்டுச் சென்ற பின்னர் படையினர் மீது தாம் தாக்குதல் நடத்தியதாகவும்—

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து படையினர் நடத்திய'ஆட்லறிஷெல்' தாக்குதலிலேயே வாகன அணியில் சென்றோர் காயமுற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## வெளித்தலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டில்லிக்குத் திடீர் விஜயம் செய்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதரும் அச்சந்திப்பின்போது உடனிருந்தார்.

''இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாவது வெளி சக்தி தலையிடுவதை இந்தியா அனுமதிக்காது. இவ்வாறான தலையீடு இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகத்தை ஏற்படுத்தும்''

— இப்படி இந்தியத் தரப்பில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக எடுத்துரைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org